2005 மார்ச் 17]

188—

ஊரக பட்டு நூற்பாலை

***24613—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணையில் உள்ள ஊரக பட்டு நூற்பாலையை மீண்டும் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை; வினா எழவில்லை.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையில் உள்ள பட்டு நூற்பாலையில் சுமார் 200 விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கொண்டுவந்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் அத்தொழிற்சாலையில் தொழில் தொடங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் இன்று தமிழகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் அடுப்பு ஊதும் பெண்களையெல்லாம் தொழிற்சாலைகளின் முதலாளிகளாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் முத்தான திட்டமாகிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சுமார் 10 குழுக்களை ஒன்றிணைத்து இத்தொழிலைத் தொடங்க முன்வந்தால், இக்கட்டடத்தை அவர்களுக்கு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இவ்வாலை செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, படடு நூலாக மாற்றப்பட்டு, முறுக்கும் பிரிவில் முறுக்கு ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆலை ஆரம்பித்த நாள் முதல் நாளது தேதி வரையில் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு இல்லாததால், இவ்வாலைக்கு 1983 முதல் 1994 வரை 43.98 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தன்னிச்சையாக செயல்பட்டு, உயர் அதிகாரிகளின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து உற்பத்திக் குறைவினை ஏற்படுத்தி தொடர் நஷ்டத்தினை உருவாக்கி வந்த காரணத்தால், இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுய உதவிக் குழுவைச் சார்ந்தவர்கள் முயற்சி செய்தால் நடத்தலாமா என்று கேட்டிருக்கிறார். தற்சமயம் TANSILK நிறுவனத்தின் சார்பில், அரசாணை எண் 311, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆணையின்படி, ஆண்டு ஒன்றுக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் குத்தகை அடிப்படையிலே 1994-ல் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டமைப்பின் மூலம் முயற்சி செய்வாரேயானால்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழு பெண்களின் கூட்டமைப்பு சார்பிலே, இதுபோன்ற முயற்சிகளைச் செய்வார்களேயானால்—நிச்சயமாக, அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 189, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

189—

கட்டட வசதி

***3662—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் போதுமான வகுப்பறைகள் இன்றி அவதியுறுவதால் கூடுதலாக வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS